**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 213/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 4 |
| Name | : | தமிழ்செல்வன், வயது 37 |
| Father Name/Husband Name | : | தங்கவேல் |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கழுகுமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 23.03.2026 ஆம் தேதி 11.00 மணிக்கு பெண் தலைமை காவலர் காளீஸ்வரி நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.98/2026 BNS பிரிவுகள் 296(b), 115(2), 351(3) ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். (**அந்த புகார்மனு அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 23.03.2026 ஆம் தேதி 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் காளியம்மாள் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பின்பு எதிரி முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை. பின்பு காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. அரவிந்த விஷ்வேஸ்வர் என்பவரை விசாரித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் காயச்சான்றுகளை பெற்றுள்ளார். (**அந்த காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகவும், அ.சா.1 மற்றும் 2 ன் காயத்தகவல்கள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் விசாரணையை முடித்து எதிரி மீது 15.05.2026 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

4.நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் புகார்தாரர் புகார் கொடுத்ததாகவும் சொல்வதும் அதனை பெற்று நிலைய காவலர் வழக்கு பதிவு செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

6.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open
court in the presence of
accused and read over to
the witness and
acknowledged by him/her to
be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.